விலை: ரூபா 1

# உதயசூரியன்

UTHAYASURIYAN

தமிழர் விடுதலைக் கூட்டணி வார இதழ்

கதிர் 1 | திருவள்ளுவராண்டு 2011 | 12-12-80 | வெள்ளிக்கிழமை | ஒளி 11

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS LIBRARY
RECEIVED
1980-12-16
PERIODICALS
DIVISION

> உண்மையான தேசபக்தி என்பது, எதற்கும் அயல் நாடுகளை நம்பி இருக்கக் கூடாது.
>
> — விவேகானந்தர்

## 'புல்மோட்டை' 'கணிகபுர' வாகின்றது ......

# புராதன பெயர்களை அழித்து புதுப் பெயர் சூட்டுவதா ?

### திருமலை சம்பந்தர் ஆட்சேபம் !

புல்மோட்டை ஒரு புராதன கிராமம். பல நூற்றண்டுகளாக அங்கு முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர். இரண்டு நூற்றுண்டுகளாக புல்மோட்டை என்ற பெயரே வழக்கில் இருந்து வருகிறது. ஆனல் இப்போது இந்தக் கிராமத்தின் பெயரை " கணிகபுர " என மாற்ற முயற்சி நடக்கின்றது.

இப் பெயர் மாற்றத்தை ஆட்சேபித்து இக்கிராமத்தில் உள்ள பெரும்பாலான மக்கள் ஜனுதிபதி , சபாநாயகர், உள்நாட்டு அமைச்சர் ஆகியோருக்கு மகஜர்கள் அனுப்பி வைத்துள்ளனர். எனினும், இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை.

இவ்வாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் மான்யம் மீதான விவாதத்தின் போது பேசிய திருகோணமலை பா.உ. திரு இரா. சம்பந்தன் மேற்படி இனவாத முயற்சிக்குக் கடும் ஆட்சேபம் தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில் சொன்னதாவது.

பூர்வீகமாக வழங்கிவரும் கிராமங்களின் பெயர்களை மாற்றிப் புதுப் பெயர்களைச் சூட்டுவதால் சிக்கல்கள் தோன்றுகின்றன. சம்பந்தப்பட்ட கிராமங்கள் தொடர்பான தகவல்களை அறிவதற்கு சிரமம் ஏற்படுகின்றது. அரசு துறையுடனுன கடிதத் தொடர்புகள் கூட ஸ்தம்பிதம் அடைகின்றன.

ஆகவே பூர்வீக பெயர்களை மாற்றி கிராமங்களுக்கு கிராமப் பிரமுகர்களின் ஆலோசனைகளைப் பெருமல் புதுப் பெயர்களைச் சூடும் திட்டத்தை உள்நாடடு அலுவல்கள் அமைச்சர் கைவிட வேண்டும்.

புல்மோட்டை கிராம நிர்வாகம் முன்னர் திருகோணமலையோடு இணைந்திருந்தது. பின்னர் அது அனுராதபுர மாவட்டத்தோடு இணைக்கப்பட்டு விட்டது. இக் கிராமத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவும், தமிழர், சிங்களவர் சிறுபான்மையாகவும் வாழ்கின்றனர்.

தமிழ்பேசும் பெரும்பான்மையினரால் அனுராதபுரத்திலுள்ள தமிழ் தெரியாத நிர்வாக அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. கிராம நிர்வாக அதிகாரிகளுக்கும் கிராம மக்களுக்குமிடையே தொடர்பு அற்றுப்போனல் கிராம அபிவிருத்தி முன்னேற்றம் ஆகியவையும் தடைப்பட்டுவிடும். ஆகவே, மீண்டும் இக்கிராமம் திருகோணமலை மாவட்டத்துடன் இணைக்கப் படவேண்டும்.

திருமலை எம்.பி.யின் மேற்படி ஆட்சேபத்துக்கு பதிலளித்துப்பேசிய நீதி அமைச்சர் திரு. நிசங்க விஜயரத்ன —

புல்மோட்டை பூர்வீகசிங்களக் கிராமமாகும் இது ஒரு முஸ்லிம் கிராமமாக அன்று இருக்கவில்லை என்று குறிப்பிட்டார்.

புல்மோட்டை கிராமப் பெயரை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் சுலபமான நிர்வாக நடைமுறைக்காகவே மாற்றியுள்ளார். இப்பெயர் மாற்றத்திற்காக, கிராமமக்களின் அனுமதியையோ, ஆலோசனையோ பெறவேண்டிய அவசியம் இல்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

---

### அமைச்சரைப் பாராட்டுகிறோம் !

கூட்டுறவு சம்பந்தமான விடயங்களில் ஆலோசனை வழங்குவதற்கென உணவு கூட்டுறவு அமைச்சரால் ஒருகுழு நியமிக்கப்பட்டுள்ளது இதன் தலைவர் உள்நாட்டு அமைச்சர் திரு. தேவநாயகம் (செய்தி)

அமைச்சர் தேவநாயகத்தின் தொகுதியில் ஜனநாயக முறைப்படி மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஏருவூர் வட— மேற்கு ப. நோ கூட்டுறவுசங்க இயக்குனர் சபையதை் திடீரென 'டிஸ்மிஸ்' செய்துவிட்டு தேவநாயகத்தின் தம்பி திரு தியாகராசாவின் தலைமையில் புதிய இயக்குநர் சபை தெரிவு செய்யப்பட்டுள்ளஇந்த நேரத்தில்—மேற்படிக் குழுவின் தலைவராக உள்நாட்டு அமைச்சரை, கூட்டுறவுத்துறை அமைச்சர் நியமித்ததிற்காக அவரின் புத்தி சாலித்தனத்தை நாம் பெரிதும் பாராட்டுகின்றேம் ! வாழ்க கூட்டுறவுத் துறை !

---

## அகதிகள் கண்ணீர் ஆறுக ஓடுகின்றது !

1977ம் ஆண்டு ஆவணிக் கலவரத்தினுல் பாதிப்புக்குள்ளான பலநூறு குடும்பங்கள் கற்குடாத் தொகுதியைச் சேர்ந்த வ'கரை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள ஆண்டான்குளம், கட்டுமுறிவு ஆகிய இடங்களில் குடியேறி வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த மூன்ருண்டுகளாக பலவிதமான தொல்லைகளுக்கிடையில் நெல், நிலக்கடலை முதலான சேனைப்பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருக்கும் இவர்களை உடனடியாக அவ்விடங்களை விட்டு வெளியேறும்படி உத்தரவிடப்பட்டுள்ளதாம்.

தாங்கள் பாடுபட்டு மேற்கொண்ட விவசாயத்தின் பலனை அனுபவிக்கும் தறுவாயில் திடீரெனப் பிறப்பிக்கப்பட்ட இவ்வுத்தரவு கேட்டு அவர்கள் கண்ணீர் வடிக்கின்றனர்.

கடந்த ஆண்டின் இறுதியிலும் அரசாங்க அதிகாரிகள் எனக்கருதப்பட்டோர் சிலர் இவ்வேழை மக்களின் வீடுகளை உடைத்துப் பெரிதும் துன்பப்படுத்தினர்.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னர், முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் குடியேறி தொழில் செய்து கொண்டிருக்கும் இந்திய வம்சாவளி மக்கள் அப்பகுதிகளிலிருந்து உடன் வெளியேற்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

**தமிழ் ஈழம் தமிழர் தாகம்**

# வெண்ணெய் கிடைத்தாலும் வெற்றிலையில் தடவுவோம்!

எழுத்லாம் என்று
எழுதுகோல் திறந்தேன்
மையே இறங்கவில்லை
மையில் கலப்படம்!

கலப்படம்—நாம்
கண்டு பிடித்துள்ள
அறுபத்தி ஐந்தாவது
அற்புதக் கலை.

என்னிடத்தில் கேட்டால்
இன்றுள்ள அங்காடி
வீதியெல்லாம்
சிவப்பு விளக்குவைக்க
வேண்டுமென்பேன்
ஏனென்றால்—இங்கே
வியாபாரம் அல்ல
விபசாரம் நடக்கிறது.

விபசாரி கூட
ஒருவகையில் உயர்ந்தவள்
அவளோ தன்னை
வியாபாரம் செய்து
கலப்படம் ஆகிறாள்
இங்கேயோ
கலப்படமே வியாபாரம்
ஆகிறது!

நமக்கெல்லாம்—
படியளக்கும் பெருமாள்
பரமனா? இல்லை—இல்லை
படியளக்கும் பெருமாள்கள்
பரம அயோக்கியர்கள்!

ஏலத்தில் கூட
மூன்றாந் தரம்கிடைக்கும்
இந்தக் காலத்தில்
கிடைப்பதெல்லாம்
நாலந் தரந்தானே!

போலிகளைக் கண்டு
ஏமாறாதே என்று
எச்சரிக்கை செய்கின்றார்
இதுதான் போலியென்று
இனம்பிரித்துக் காண
உண்மையைக் கண்டவர் யார்?

நகலையே அசலாக
நம்பிப் பழகிவிட்டோம்
அப்படியே ஒருவேளை
அசலைப் பார்த்தாலும்
அடையாளம் தெரியாது!

சுண்ணாம்பை
வெண்ணெயாய்ச்
சுவைத்துப் பழகிவிட்டோம்
வெண்ணெய் கிடைத்தாலும்
வெற்றிலையில்தான்
தடவுவோம்!

போலி நளன்களுக்கே
பூமாலை போட்டுத்
தட்டழிந்து போன
தமயந்திக் கூட்டம் நாம்!

அணுக்குண்டு செய்ய நாம்
அறியாமல் இருக்கலாம்
ஆனால்
அதைப் போலச்
செய்வதென்றால்
ஆயிரம் பேர் உண்டிங்கு!

நம்முடைய முன்னோர்கள்
தீர்க்க தரிசிகள்
கடைகெட்ட வேலை
ஒரு காலத்தில்
நடக்குமென்றே
கடையென்று பெயரிட்டார்!

ஏமாற்றிப் பொருள்
சேர்த்தல்
இழிவான செயலென்று
கல்லாத பெட்டிக்குக்
கல்லாப் பெட்டியென்றார்!

முன்பெல்லாம்
கண்கட்டு வித்தை
கடைத்தெருவில்
நடக்கும்-இன்றோ
கடையிலேயே நடக்கிறது.

இவர் கையில்
மந்திரக்கோல் இல்லை
துலாக்கோல் இருக்கிறது
நகலெல்லாம் இவர்கையில்
அசலாகி விடுகிறது!
நிழலெல்லாம் இங்கே
நிஜமாகி விடுகிறது!

கடைப்பால் என்றாலே
கலப்புப்பால் வள்ளுவரின்
கடைப்பாலுமே அதுதானே!

பேராசிரியர்

## அப்துல் ரகுமான்

ஆண்பாலும் பெண்பாலும்
அன்பாலே கலக்கும்பால்
எனவே—
கலப்புப்பால் விற்கும்
கடைக்காரர் எல்லாம்
வள்ளுவர் காட்டிய
வழியிலே நடப்பவர்கள்.

அன்னம் என்று ஒருபறவை
அக்காலம் இருந்ததாம்
இன்றைக்கு இல்லை
ஏனென்று தெரியுமா?
பாலையும் நீரையும்
பகுத்தறியும் அன்னத்தைப்
பால்காரர் விடுவாரா?
பகைஎன்று ஒழித்துவிட்டார்.

பெருமான் சிவனைவிடப்
பெரியவர்கள் நாமெல்லாம்
அவன்
விஷமுண்டும் சாகாத
வியப்புக் கதை சொல்வார்
நாமோ
அன்றாடம் விஷமுண்டும்
அழியாமல் இருக்கின்றோம்!

சாதிகளை ஒழிக்கச்
சத்தங்கள் போடுகின்ற
சீர்திருத்தக் காரர்களே!
உயர்சாதி தாழ்சாதி
ஒன்றாக்கி வைக்க
கண்ட பொருள்களுக்குக்
கலப்புத் திருமணத்தைப்
பண்ணி வைக்கும்
இவர்களிடத்தில்
பாடம்
கற்றுக் கொள்ளுங்கள்!

இந்நாட்டு மக்களிடம்
ஏற்றத் தாழ்வுகள்
எப்போது மறையுமோ?
ஆனால் இவர்களோ—
எல்லாப் பொருள்களிலும்
அதை
இல்லாமல் செய்துவிட்டார்.

கவிஞர்களும் இவர்களிடம்
கற்பதற்கு நிறையவுண்டு
செம்மிளகாய் தூளுக்குச்
செங்கல் பொடியென்றும்
பதமான மிளகுக்குப்
பப்பாளி விதையென்றும்

பொருள்களுக்கெல்லாம்
பொருத்தமான உவமைகள்
எப்படித்தான் இவருக்கு
எளிதாக் கிடைக்கிறதோ?

அங்கிங் கெனாதபடி
எங்கும் இருப்பது
கடவுளுக்கு அடுத்தபடி
கலப்படந்தான்!
இன்றைக்கு
எந்தத் துணிமீதும்
ஐஎஸ்ஐ முத்திரை
குத்த முடியாது.

வான் கோழிகள்
வர்ணமடித்துக் கொண்டு
தோகைச் சவுரி
கட்டிக்கொண்டு
மயில்களோடு
நடன மாடுகின்றன!

இரவல் குரலோடு
காகங்கள்
குயில்களோடு
உலாவுகின்றன!
புகை மேகத்தோடு
திரிகிறது—
மின்மினிகள்
நட்சத்திரங்களோடு
மினுக்குகின்றன!

பூவோடு சேர்ந்த நாரும்
மணக்கிறது என்பது
பழமொழி
விலையும் ஆகிவிடுகிறது
என்பது புதுமொழி!

பெண்டுகளைக் கற்பழித்தல்
பெரும்பாவம் என்றால்
பண்டங்களைக் கற்பழிக்கும்
பாவிகளை விடலாமா?

கூட்டிக் கெடுப்பவனைக்
குறை சால்லித்
தூற்றுகின்றோம்
அசலோடு நகலைக்
கூட்டிக் கொடுப்பவனைக்
கூண்டிலேற்ற வேண்டாமா?

நல்லவை குறைந்து
அல்லவை மிகும்
போதெல்லாம்
அவதாரம் எடுப்பேனென்று
ஆறுதல் சொன்னவனே!

அசல்களெல்லாம் குறைந்து
நகல்களெல்லாம்
மிகுந்துகொண்டு
போகிறதே—
இதற்கோர் அவதாரம்
கிடையாதா?

(ஆனந்த விகடன் பொன் விழாக் கவிதை) ★

# இலட்சிய ...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் நிர்வாக அமைப்பில் ஒரு பெரிய திருத்தத்தைச் செய்யும் நோக்கத்துடன் நாடெங்கும் மாவட்ட சபைகளை அமைப்பதற்கு வழி வகை செய்யும் மாவட்ட சபை மசோதாவை நிறைவேற்றுவதற்கு தேசிய அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது. சனநாயகம் இந்நாட்டில் சிறந்த முறையில் நடைபெற இது அவசியமானதாகும். தமிழரசுக் கட்சியைப் பொறுத்த வரையில் நாம் எதிர்பார்த்த அளவு அதிகாரங்கள் குறித்த மசோதாவின் படி கிடைக்காதென்பது உன்மைதான். ஆயினும் தேசிய அரசாங்கம் கொண்டு வரும். இம் மசோதாவை ஏற்றுக் கொண்டு குறைந்த அதிகாரங்களுடன் என்றாலும் மாவட்ட சபைகளை நிறுவிக் கொள்வதே அரசியல் புத்திசாலித் தனமான காரியம் என்று எமது கட்சி கருதுகிறது. ஒரு காலத்தில் சிங்களப் பகுதிகளில் இருக்கும் மாவட்ட சபைகளே மேலதிக அதிகாரம் கோரி கிளர்ச்சி செய்யலாம் அச் சந்தர்ப்பத்தில் அவற்றுக்கு அதிகாரங்களைக் கூட்டிக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்திற்கு ஏற்படும். அதன் பலனாக அவ்வதிகாரங்கள் தமிழ் பிரதேச மாவட்ட சபைகளுக்கும் கிடைத்தே தீரும். ஆனால் அதிகாரம் போதாது என்ற காரணத்துக்காகவும் மாவட்ட சபை மசோதாவிலுள்ள சில விதிகள் எமக்குப் பிடிக்கவில்லையென்பதற்காகவும், மாவட்டசபை மசோதாவையே இப்போது ஏற்றுக் கொள்ளாது விடுவோமானால் எதிர்காலத்தில் மாவட்ட சபைகளே கிடைக்காமல் போய்விடும். 50க்கு 50 கோரிக்கையை முன் வைத்து கிளர்ச்சி நடந்த நேரத்தில் 60க்கு 40 வழங்க முன் வந்த போது, அதை நிராகரித்தது எப்படிப்பட்ட அரசியல் முட்டாள்தனமோ அதே போன்றதே இப்போதய மாவட்ட சபைகளை ஏற்றுக் கொள்ள மறுப்பதும். அத்தகைய அரசியல் முட்டாள்தனத்தில் தமிழரசுக் கட்சி இறங்காது. உண்மையான சனநாயகப்படி நாட்டில் நாலா திசைகளிலும் இருக்கும் எல்லா மக்களுக்கும் அரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டியது அவசியமாகும். அப்பொழுதுதான் ஒவ்வொரு பிரசையும் சுதந்திரத்தின் பலாபலனை அனுபவிக்க முடியும். காலனி ஆட்சி முறையாகிய கச்சேரி முறை ஒரு பழைய பத்தாம் பசலி ஆட்சி முறையாகும். எனவே அதை மாற்றி அமைத்து அதற்குப் பதிலாக மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட மாவட்ட சபைகளை அமைத்து நிர்வாகத்தைப் பரவலாக்கும் நோக்குடன் மாவட்ட சபைகளை நிறுவ அரசாங்கம் முடிவு செய்து அதற்கான மசோதாவை வெளியிட்டுள்ளது, மாவட்ட சபை மசோதாவில் போதிய அதிகாரம் தரப்படவில்லை என்றும், அதனால் இம் மசோதாவினால் பலனில்லை என்றும் சிலர் குறைப்படுகிறார்கள். தமிழரசுக் கட்சியை பொறுத்த வரை மசோதாவில் நாம் எதிர்பார்த்த அதிகாரங்கள் அளிக்கப்படவில்லை என்பதையும் நான் மறுக்கவில்லை. ஆனால் அதற்காக மசோதாவையே எதிர்ப்போமானால் அது அரசியல் முட்டாள் தனமான செயலாக இருக்கும். மாவட்ட சபைகள் வரவிருக்கும் இத்தருணத்தில் மசோதாவை நாம் எதிர்த்து நிலைமையை குழப்பி விடுவோமானால் பின்னர் அண்மைக் காலத்தில் மாவட்ட சபைகள் அமைக்கக் கூடிய வாய்ப்பே ஏற்படாமல் போய்விடும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அதிகாரங்கள் குறைந்திருந்தாலும் மசோதாவை ஏற்றுக் கொள்ளுவதென்று நமது கட்சி முடிவு செய்திருக்கிறது'',

தந்தை செல்வா மேற்கண்ட கருத்தை வெளியீட்டு மாவட்ட சபைகளைப் பெறுவதற்காக பிரதமர் டட்லியோடு ஒப்பந்தம் எழுதி, அரசாங்கத்தை ஆதரித்து, அதற்காகத் திரு திருச்செல்வத்தை அமைச்சராக்கி அரும்பாடு பட்டார். இன்று நிறைவேற்றப்பட்டிருக்கும் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் சட்டத்திற்குப் பிரதியாக எந்த ஒப்பந்தமோ, அரசுக்கு ஆதரவோ எதுவுமில்லை என்பதையும் நாம் எமது இலட்சியத்திலிருந்து இம்மியும் வழுவாது உறுதியுடன் நிற்கின்றோம் என்பதையும் எண்ணினால் எம் மீது குற்றம் கூறுவோரின் விதண்டா வாதம் புலனாகும்.

அண்ணன் அமிர்




# காலம் உணர்ந்து களம் அமைப்போம்!

அயர்லாந்து தேசத்தின் விடுதலைப் போரில் நடந்த ஒரு சம்பவத்தை இலட்சிய இதயங்களின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். எழுநூறு வருடங்களாக நடைபெற்ற அப்போரில் காலத்துக்குக் காலம் ஆயதப் போராட்டங்கள் இடம் பெற்றன. ஒவ்வொரு சந்ததியில் ஒரு முறையாவது—முப்பது ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது—ஆயுதந் தாங்கிய எழுச்சி ஏற்படத் தவறவில்லை. 1916ம் ஆண்டு ஆங்கில ஏகாதிபத்தியம் உலக மகாயுத்தத்தில் ஈடுபட்டிருந்த நேரம். ஐரிஷ் வீரர் சேர் ரோஜர் சேஸ்மென்ற் ஜேர்மன் நாடு சென்று அங்கிருந்து ஆயுதங்கள் பெறுவதற்கு ஏற்பாடு செய்தார். திட்டமிட்ட எழுச்சிக்கு முன் விடுதலை வீரர்கள் தயாராக்கப்பட்டனர். ஏ ரல் மாதம் ஈஸ்டர் வாரத்தில் — டப்ளினில் இருந்த ஆங்கில படைவீரர் ஈஸ்டர் விடுமுறையில் சென்ற நேரத்தில் — சுதந்திரப் பிரகடனம் செய்து போராட்டம் நடாத்துவதென்று ஐரிஷ் தேச பக்தர்கள் திட்டம் தீட்டினர். ஈஸ்டர் பெரிய வெள்ளிக்கிழமை யன்று சேர் ரோஜர் சேஸ் மென்ற் ஜேர்மனியிலிருந்து ஓர் நீர்மூழ்கியில் அயர்லாந்தில் கெறி என்ற இடத்தில் வந்திறங்கினர். ஆனால் ஆங்கிலேயரால் கைது செய்யப்பட்டார். ஆயுதங்கள் கொண்டு வந்த 'அவுட்' என்ற ஜேர்மன் கப்பல் பிரித்தானிய குரூய்யர் ஒன்றினால் தடுக்கப்பட்டு அக்கப்பலின் தளபதியின் கட்டளைப்படி அவர்களாலேயே வெடி வைத்துத் தகர்க்கப்பட்டது. அமெரிக்காவில் வாழ்ந்த ஐரிஷ் விடுதலை ஆதரவாளர்களின் உதவியுடன் ஒழுங்கு செய்யப்பட்ட ஆயுத உதவியும் கிடைக்கவில்லை.

டீவலேரா போன்ற பலர் போராட்டத்தைக் கைவிட விரும்பினர். ஆனால் தீவிரவாதிகளான சிலர் திட்டமிட்டபடி நடாத்தத் தீர்மானித்தனர். ஐ. ஆர் பி. என்ற ஐரிஷ் குடியரசு இயக்கத்தின் சார்பில் குடியரசுப் பிரகடனம் செய்யப்பட்டு ஓர் இடைக்கால அரசாங்கமாக எழுவர் கையெழுத்திட்டனர். ஈஸ்டர் திங்கட்கிழமையன்று இப் பிரகடனத்தின் முன் அயர்லாந்தின் தலைநகரான டப்ளினைச் சுற்றி விடுதலை வீரர்கள் நிறுத்தப்பட்டனர். பிரதானமான பல கட்டடங்கள் உதாரணமாக - தலைமைத் தபால் நிலையம் போன்றவை - கைப்பற்றப்பட்டு அவற்றை பாதுகாப்பு நிலையங்களாக மாற்றினர். பயங்கரமான யுத்தம் நடைபெற்றது. திங்கட்கிழமையும் செவ்வாய்க் கிழமையும் நூற்றுக் கணக்கானோர் கொலையுண்டனர். ஆங்கிலேயரின் தலைமை நிலையமான கோட்டை தாக்கப்பட்டது. ஆனால் அதைக் கைப்பற்றுவதில் தோல்வி கண்டனர். சனிக்கிழமை விடுதலை வீரர் சரணடைந்தனர். எங்கும் பிணக்குவியல்கள் காணப்பட்டன. குடியரசுப் பிரகடனத்தில் கையொப்பமிட்ட ஏழுபேரும் இராணுவ நீதிமன்றத்தினால் மரணதண்டனை விதிககப்பட்டுச் சுட்டுக்கொல்லப்பட்டனர். பலநூறுபேர் சிறைத் தண்டனையும் இரண்டாயிரம் பேர் வரையில் நாடு கடத்தல் உத்தரவும் பெற்றனர். டீவலேரா தானும் சுடப்படுவேன் என்று எதிர்பார்த்தாராயினும் அவர் அமெரிக்கப் பிரஜையாக இருந்த காரணத்தினால் — யுத்தத்தில் அமெரிக்காவின் உதவி தேவையாயிருந்த காரணத்தினால் - அமெரிக்காவில் குடியேறிய ஐரிஷ் மக்கள் செல்வாக்கு மிகுந்தவர்களாயிருந்த காரணத்தினால் டீவலேரா உயிர் தப்பினார். அவருக்குச் சிறைத் தண்டனை கிடைத்தது.

அயர்லாந்தின் நீண்டகால விடுதலைப்போரில் இந்த ஒரு அத்தியாயத்தை நான் இலட்சிய இதயங்களுக்கு எடுத்துக்காட்டுவது அந்த எழுச்சியின் தோல்வியை நினைவுபடுத்துவதற்கல்ல, தோல்விகளே இறுதி வெற்றியின் தூண்கள். விடுதலைப் போரில் எத்தனையோ தோல்விகளைத் தாங்க வேண்டி வரும். எத்தனையோ பேர் பலியாக வேண்டி வரும். சிறைவாசம் நாடுகடத்தல், இரத்தம், வியர்வை, கண்ணீர் இவையெல்லாம் எதிர் பார்க்கப்பட வேண்டியவையே. இவையின்றி விடுதலை பெற்ற இனங்கள் மிகக் குறைவு ஆனால் ஐரிஷ் விடுதலை வரலாற்றில் இந்த ஏட்டை நான் காட்டுவது வேறு காரணத்திற்காக பல நூற்றாண்டுகளாகப் போராடிய ஐரிஷ் மக்களே சுதந்திரப் பிரகடனத்தைப் பற்றிச் சிந்திக்கு முன் என்ன ஆயத்தங்களைச் செய்தனர் என்பதை நாம் கருத்திற்கொள்ள வேண்டாமா?

போராட்டத்திற்கு ஏற்ற தருணத்தைத் தெரிவு செய்தனர். ஆங்கிலேயர் பலம்வாய்ந்த ஜேர்மன் வல்லரசுடன் யுத்தத்தில் ஈடுபட்டிருந்த நேரத்தைத் தெரிந்தெடுத்தனர். இதை நாம் எடுத்துக்கூறினால் எள்ளி நகையாடுகின்றனர் சிலர், பொலீசாரைக் கண்டாலும் நடுங்கும் சிலர். அவர்கள் விசாரணை செய்யும்போது தாம் தப்புவதற்காக எதையும் கூறுவதற்கு ஆயத்தமான சிலர் எம்மைக் கேலி செய்கின்றனர். வள்ளுவரே கூறிய அறிவுரையை—
''பகல் வெல்லும் கூகையைக் காக்கை
இகல் வெல்லும் வேந்தர்க்கு வேண்டும்பொழுது''
என்பதை எடுத்துக் காட்டினால் நகைக்கின்றனர் சில பேனாவீரர்கள். பகைவன் பலமாயிருக்கும் போது பலங்கொண்ட ஐரிஷ் விடுதலைவிரர் கூடப் போராட எண்ணவில்லை என்பதை நாம் கவனத்திற் கொள்ளவேண்டும்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே அவர்கள் சுதந்திரப் பிரகடனத்திற்கு நாள் குறிப்பிட்டுப் பத்திரிகையில் விளம்பரம் செய்யவில்லை. எதிரி அதை முறியடிப்பதற்கு எல்லா ஆயத்தங்களையும் செய்வதற்கு உண்மையில் விடுதலைப் போரில் ஈடுபட்டிருக்கும் எவராவது முன்னறிவித்தல் கொடுப்பாரா என்பதை இலட்சிய இதயங்கள் உணர வேண்டும்.

ஆயுதந் தாங்கித் தாம் பிரகடனம் செய்த குடியரசைக் காக்கும் ஆயத்தத்தோடு—தாம் ஏற்றிய சுதந்திரக் கொடியை இன்னுயிர் ஈந்து காத்து நிற்க ஆயத்தமான மறவர் படையை வைத்துக் கொண்டே சுதந்திரப் பிரகடனத்தைப் பற்றி யோசித்தனர் ஐரிஷ் விடுதலைப் படையினர்.

தமது நாட்டை அடக்கியாண்ட ஆங்கில ஏகாதிபத்தியத்தோடு யுத்தத்தில் ஈடுபட்டிருந்த ஜேர்மன் வல்லரசோடு தொடர்பு கொண்டு அங்கிருந்து கப்பல் கப்பலாக விடுதலைப் படைக்கு ஆயுதங்களைப் பெறுவதற்கு ஒழுங்கு செய்திருந்தனர். அமெரிக்காவல் வாழ்ந்த ஐரிஷ் மக்களும் பண உதவி, ஆயுத உதவி, அமெரிக்க பேரரசை ஐரிஷ் குடியரசிற்கு ஆதரவாக நிற்கத் தூண்டும் உதவி ஆகியவற்றைச் செய்தனர்.

இத்தனை ஆயத்தங்களின் பின்பு குடியரசுப் பிரகடனத்திற்கு நாள் குறிப்பிட்டது—அதற்கு முடிவெடுத்தது—அயர்லாந்து தேசத்தில், டப்ளின் நகரத்தில் போராட்டத்தை நடத்தத் தயாராக நின்ற விடுதலைப் படையின் தலைவர்களே யன்றி எங்கோ வாழ்ந்து கொண்டு—அயர்லாந்தில் கால் வைக்கவே ஆலோசித்துக் கொண்டு நின்ற ஒரு சிலர் அல்ல என்பதை ஈழத் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலையில் கருத்துக் கொண்ட இலட்சிய இதயங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

விடுதலைப் போரை நடத்துவது—சுதந்திரப் பிரகடனம் செய்வது விளையாட்டான காரியமாக யாரும் கருதிவிடக் கூடாது. தந்தை செல்வா கூறியதுபோல ''மிகவும் வில்லங்கமான காரியம்'' அதுவும் ஏறத்தாழ நாநூறு ஆண்டு அடிமைப்பட்டிருந்த ஓர் இனத்தை விடுதலைப் பாதையில் அழைத்துச் செல்வது சுலபமான காரியமல்ல. எம்மினத்தின் நிலையையும் பலத்தையும் அறிந்தே தந்தை செல்வா எம் போராட்ட மார்க்கம் அண்ணல் காந்தி வகுத்த அறப்போர் நெறிதான் என்று அறுதியிட்டுக் கூறினார். அந்த வழியிலேயே அவர் வளர்த்த இயக்கம் சென்று கொண்டிருக்கிறது.

அந்தப் பாதையில் செல்லும்போது எம்மைப் பலப்படுத்துவதற்கு சிலபாதுகாப்புக்களைத்தேடிக் கொள்ள வேண்டுமென்பதைத் தெளிவாகக் கூறினார். அதில் முதன்மை வாய்ந்தது எமது பாரம்பரியமானமண்ணைப் பாதுகாப்பதாகும். மாற்றாரின் குடியேற்றத்தினால் மண் பறிபோனால் அதை மீட்டெடுப்பது முடியாத காரியமாகிவிடும் என்பது அவர் அறிவுரையாகும். அயர்லாந்துதேசத்தின்வரலாறு அது எவ்வளவு உண்மை என்பதை நிரூபிக்கிறது முந்நூறு ஆண்டு நடந்த விடுதலைப்போர் வெற்றி பெற்று ஐரிஷ் சுதந்திரக் குடியரசு நிறுவப்பட்டபோதும் ஆங்கிலக் குடியேற்றத்தினால் புரொட்டெஸ்டாந்து மதத்தவர் பெரும்பான்மையான வடக்கு அயர்லாந்து—அல்ஸ்டர் மாகாணம்—ஆங்கில ஆட்சியிலேயே தங்கிவிட்டது. அதை மீட்டெடுக்கக் கொலைக்குக் கொலை, இரத்தத்திற்கு இரத்தம் என்று போராடிக் கொண்டிருக்கும் ஐரிஷ் குடியரசுப் படை ஓர்புறமும் அதைத் தடுக்கத் துணிந்து நிற்கும் புரொட்டேஸ்டாந்து மதத்தைச் சார்ந்த பெரும்பான்மையோரின் படை மறுபுறமுமாகக் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகப் போர் புரிந்து வருகின்றனர்.

மண்ணைக் காக்கும் ஒரே நோக்கத்தோடு தான் தந்தை செல்வா பிரதேச சபைகளை நிறுவப் பிரதமர் பண்டாரநாயக்காவோடு ஒப்பந்தம் செய்தார். பிரதமர் டட்லி சேனநாயக்காவோடு மாவட்ட சபைகளை நிறுவ ஒப்பந்தம் எழுதினார். பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயகா வோடு பேச்சு வார்த்தை நடத்தினார். அந்த இலக்கை நாம் அடைய ஓரளவு உதவும் என்று நாம் நம்புகின்ற மாவட்ட அபிவிருத்தி சபைகளை நாம் ஏற்றதைத் துரோகமென்று தம்பிமார் இரண்டொருவரும் முதியவர் இரண்டொருவரும் கூறித் திரிகின்றனர். தந்தையின் பேரையும் இப்பிரசாரத்திற்கு அவர் பயன்படுத்தும் காரணத்தினால் 10-6 68ல் அதிகாரங்கள் குறைந் திருந்தாலும் மாவட்ட, சபைகளை ஏற்பது ஏன்'' என்ற தலைப்பில் தந்தை சுதந்திரன் பத்திரிகையில் எழுதிய விளக்கத்தை இலட்சிய இதயங்களுக்குத் தர விரும்புகிறேன்.

( 2ம் பக்கம் பார்க்க )

# திருமலைக்கு ஒரு பெருமை!

தமிழ் இலக்கியப் பரப்பில் — தமக்கு என ஒரு முத்திரையைப் பதித்துவிட்டுச் சென்றவர்களில் மயிலாடுதுறை (மாயூரம்) வேதநாயகம்பிள்ளை மறக்கமுடியாத மனிதர்.

''நாவல்'' எனும் விதையை நாட்டின் மண்ணுக்கேற்ப நட்டு வளர்த்த இந்த எழுதுகோல் உழவரின் பயிருக்கு — இல்லை — பழுத்த மரத்திற்கு அகவை (1879) நூற்றுக்கு மேல் ஆகிவிட்டது — இன்னும் பசுமை குறையவேயில்லை!

எழுதுகோல் ஏந்துவதிலும் — தமிழீழம் தமிழகத்திற்கு எவ்விதத்திலும் குறைந்ததல்ல என்பதை எடுத்துக்காட்டுவது போல் — மயிலாடுதுறையாரை அடுத்து இந்த மாபெரும் பணியில் ஈடுபட்டவர் நம் மண்ணின் சொந்தக்காரரான சித்தி லெவ்வை மரைக்காயர்!

இன்பத் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிருக்கும் நமது இஸ்லாமிய உடன்பிறப்புகளுக்கு இது ஒரு இனிக்கும் வரலாற்றுச் செய்தி!

தமிழ்ப் பணியாற்றுவதில் தக்கதோர் இடத்தைத் தமதாக்கிக் காண்டிருக்கும் அவர்கள் முன் நாம் தலைதாழ்த்தி நிற்கின்றோம்!

சித்தி லெவ்வை மரைக்காயர் ஒரு சிறந்த அறிஞர் — பத்திரிகாதிபர் — படைப்பாளி — அசன்பேயுடை கதை எனும் நாவல் அதற்கு ஓர் அரிய சான்று!

1885-ம் ஆண்டில் அழுத்தகமாகி வெளியான அந் நாவல், சாகசங்களுக்கும் மர்மச் சம்பவங்களுக்கும் பேர்போனது. ஒருவகையில் இதனை ஒரு மர்மநாவல் என்று தமிழ் இலக்கிய உலகம் ஒப்புக்கொள்ளக்கூடும்.

இதனை இங்கே குறிப்பிடும்போது நமது உள்ளம் திருகோணமலை அருள் சுப்பிரமணியத்தை நினைத்துக்கொள்கின்றது.

தமிழகத்தின் வார இதழ்களில் ஒன்றான 'ஆனந்த விகடன்' பொன்விழா மர்ம நாவல் போட்டியில் முதற் பரிசைப் பெற்றுக்கொண்டதின் மூலம் தமிழீழம் தலைநிமிர்ந்து நிற்கச் செய்த பெரும் எழுத்தாளர் அவர்!

தூரத்துத் தமிழரின் கண்களை அவரது மனத் தூரிகை வரைந்த ஓவியங்கள் கவர்ந்துகொண்டதையெண்ணி நாம் களிப்படைகின்றோம்!

தமிழ் நாவல் இலக்கியத் துறையில் அருள் சுப்பிரமணியத்தின் திருகோணமலைக்குத் தனி இடம் உண்டு.

அறிஞர் சித்திலெவ்வை மரைக்காயரின் நாவல் பிறந்து சரியாக ஆறு ஆண்டுகளின் பின் (1891) திருகோணமலை எஸ். இன்னாசித்தம்பி அவர்களே ஊசோன் பாலந்தை கதை எனும் நாவலை தமிழ் இலக்கிய உலகிற்குத் தந்தார்.

கல்கி ரா. கிருஸ்ணமூர்த்தியினால் கவர்ச்சிகரமாக எழுதப்பட்ட வரலாற்று நாவல்களுக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்வது மோகனாங்கி எனும் நாவல். (1895)

இதனைப் படைத்தவர் — திருகோணமலை த. கனகசுந்தரம்பிள்ளையின் இளவல், தி. த. சரவணமுத்துப்பிள்ளை என்பவரே!

இத்தகையோர் பிறந்த மண்ணில் தோன்றி இன்று இணையிலாப் புகழ் பெற்று விளங்கும் திரு. க. அருள் சுப்பிரமணியத்தின் சாதனை ஒரு சரித்திரம் — திருமலைக்கு ஒரு பெருமை!

உதட்டால் அல்ல — உள்ளத்தால் அவரைப் பாராட்டுகின்றோம்.

எழுத்தாளர் அன்புமணி குறிப்பிட்டுள்ளது போல், அரசாங்க மட்டத்தில் அருள் பாராட்டப்பட வேண்டும்.

பாராட்டுத் தேனை அருள் சுப்பிரமணியம் பருகிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அவர் முன்னே ஒரு பணிவான வேண்டுகோளை வைக்க விரும்புகின்றோம்.

தங்கம் நிகர்த்த தங்கள் எழுத்துக்கள், இனிமேல் தமிழீழத்தின் மீட்புக்காகப் பெரிதும் பயன்படவேண்டும்.

நீங்கள் நினைத்தால் — ஓர் அலைஓசை ஒரு புது வெள்ளம் — ஒரு கல்லுக்குள் ஈரம் — நிச்சயம் படைத்தளிக்க முடியும்.

காலத்தின் சரியான கண்ணாடி எழுத்தாளன்.

பெரும் எழுத்தாளராகிய தாங்கள் தமிழினத்தின் பிரச்சனையை மிகச் சிறப்பாகவே பிரதிபலிக்கமுடியும்.

எழுதுங்கள்! உங்கள் ஆக்கத்திற்கு ஊக்கம் தர தமிழினம் காத்திருக்கின்றது!

**ஆசிரியர் பேசுகிறார்**

# அரசாங்கத்தைச் சாடும் ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி !

முன்னாள் அமைச்சரும் ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினராகத் திகழ்பவருமான எம்டி. எச். ஜயவர்த்தனா அவர்கள் துணிந்து அரசாங்கத்தின் தவறுகளைச் சுட்டிக் காட்டிப் பேசுவதில் பேர் பெற்றவர். இவரைப் போலவே மட்டக்களப்புத் தொகுதியின் இரண்டாவது (யு. என். பி,) எம். பி. ஜனாப்— பரீத் மீரா லெவ்வை அவர்களும் அரசின் தவறுகளைச் சுட்டிக் காட்டிப் பேசத் தயங்கமாட்டார் என்பதை உயர் கல்வி அமைச்சின் வரவுசெலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகள் மீதான விவாதத்தி அவர் கலந்துகொண்டு ஆற்றிய உரை எடுத்துக் காட்டுகின்றது.

அவர் பேசுகையில் கூறியதாவது—

சூறுவளியால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு பாடசாலைகளின் அவல நிலையை எதிர்க் கட்சித் தலைவர் இங்கு தெரிவித்தார். ''நக்குண்டார் நாவிளந்த நிலையா?'' என்ற தலைப்பில் தினபதியில் வெளியான கட்டுரையில் இருந்து புள்ளி விவகாரங்களையும் வாசித்துக் காட்டினார் அங்கு நடக்கும் அநீதிகளை எதிர்த்துப் பேச வாயிழந்த நிலையில் எமது இரு அமைச்சர்கள் இருப்பதாகவும் கட்டுரையிலிருந்து சுட்டிக் காட்டினார்.

மட்டக்களப்பில் சூறுவளியின்போது மொத்தம் 241 பாடசாலைகள் சேதமுற்றன. அவற்றில் 171 பாடசாலைகளைப் பழுது பார்க்கும் பொறுப்பை தனியார் நிறுவனம் ஒன்று கொந்தராத்து அடிப்படையில் ஏற்றது. அதன் வேலைகளைப் பற்றி மட்டக்களப்பு அரசாங்க அதிபர், எம் பிமாருக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

அதில், 40 பாடசாலைகள் இந்த ஆண்டு இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்ப்பதாக அரசாங்க அதிபர் தெரிவித்திருக்கிறார். மற்றும் கணக்கு வழக்கு குளறுபடிகள் இருப்பதாகவும் சுட்டிக் காட்டியிருக்கிறார். நிவாரணப் பணிகள் ஆரம்பமாகி இரு வருடங்கள் முடிந்தும் திருத்த வேலைகள் பூர்த்தி அடையவில்லை. சம்பந்தப்பட்ட 171 பாடசாலைகளையும் உரிய காலத்தில் மேற் டி நிறுவனம் திருத்தி முடிக்கும் என்று நான் எண்ணவில்லை. பாடசாலைத் திருத்த வேலைக்கென்று ஒன்றரைக் கோடி ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது

திணைக்களக் கட்டணத்தில் திருத்த வேலைகளை மேற்கொள்ளத் தயாராக பல உள்ளூர் கொந்தராத்துக் காரர்கள் இருக்கிறார்கள். மட்டக்களப்பு பாடசாலைத் திருத்த வேலைகளை அவர்களிடம் ஒப்படைத்தால் துரிதமாக செய்து முடிப்பார்கள் திருத்த வேலைகளை அவர்களிடம் ஒப்படைக்குமாறு நான் பிரதி அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

மட்டக்களப்பில் 850 ஆசிரியர்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. போதிய ஆசிரியர்கள் இன்மையால் ஜீ.சி.ஈ.உயர்தர மாணவர்களால் தங்கள் பாடத் திட்டத்தை உரிய நேரத்தில் பூர்த்தி செய்ய முடியாமல் இருக்கிறது. இந்தக் குறையைத் தீர்க்க பிரதி அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். தேவையான ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

றுகுனு பல்கலைக் கழகமும், வந்தாறுமூலை பல்கலைக் கழகக் கல்லூரியும் ஒரே காலத்தில் திட்டமிடப் பட்டவை றுகுனு பல்கலைக் கழகத்துக்காக புதிய ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 11 கோடி ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது. ஆனால் வந்தாறுமூலைப் பல்கலைக் கழகக் கல்லூரிக்காக ஒரு சதமேனும் ஒதுக்கப்படவில்லை. அண்மையில் அந்தக் கல்லூரிக்காக 43 லட்சம் ரூபா மாத்திரமே ஒதுக்கப் பட்டிருக்கிறது. இது வருத்தத்திற்குரியதாகும்

பிரதி அமைச்சர் திரு. அத்த நாயக்க: றுகுனு பல்கலைக் கழகத்துக்காக 11 கோடி ரூபா அல்ல—40 கோடி ரூபா ஒதுக்கப் பட்டிருக்கிறது.

சபா நாயகர் அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார்: வந்தாறுமூலைப் பல்கலைக் கழகத்துக்காக ஒருசதமும் ஒதுக்காமல் விட்டு விட்டீர்களே.

# பல்கலைக் கழகக் கல்வியில் பாகுபாடு !

# தரப்படுத்தல் தொடர்கிறது...

# தமிழர்களைத் தனியாகவிடுங்கள்

## நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி முதல்வர்



**தமிழ் மாணவர்களின் உயர் கல்வி வளர்ச்சியில், இன்றைய யு. என். பி. அரசு — உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்பதற்கான ஆதாரங்களை அடுக்கிக் காட்டி எதிர்க்கட்சி முதல்வர் அமிர் அவர்கள் 1-12-80ல் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையின் முதற் பகுதியை இங்கே தருகின்றோம்-**

கௌரவ தலைவர் அவர்களே, உயர்கல்வி அமைச்சின் மானியத்தின் மீது 10 ரூபா வெட்டுப் பிரேரணையைச் சமர்ப்பித்து சில விடயங்களை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் இந்த மானியத்திலிருந்து ஏற்கெனவே நிதி அமைச்சரினால் கணிசமான தொகை வெட்டப்பட்டு விட்டது, ஏனைய துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட பணம், அரசாங்கத்தின் நிதி நிலைமை காரணமாக வெட்டப்படுவதை நாங்கள் ஆட்சேபிக்காதபோதிலும் உயர் கல்விக்கு ஒதுக்கப்பட்ட பணம் குறைக்கப்படுவதை நாங்கள் கடுமையாக ஆட்சேபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**கல்வி - ஒரு சமுதாயத்தின் உயிர்**

எந்த ஒரு சமுதாயத்தின். முன்னேற்றமும் அந்தச் சமுதாயத்தின் கல்வி வளர்ச்சியிலேயே தான் தங்கியிருக்கிறது. கல்வி வளர்ச்சி என்று நான் கூறும்பொழுது, வெறுமனே ஆரம்ப கல்வி, மத்திய தரக் கல்வி ஆகியவற்றில் மாத்திரமல்ல, உயர்கல்வி உயர் பட்டதாரிப் படிப்பு, போன்ற உயர் பட்டப்படிப்பு போன்றவற்றிலும் தான் சமுதாயத்தின் வளர்ச்சி தங்கியிருக்கிறது. அரசாங்கம், இந்தப் பட்டப்படிப்பு மேற்படிப்புக் கல்வியைக்கூட இங்கேயே மேற்கொள்ளவேண்டும் என்ற கருத்தில் வைத்தியத்துறையில் பட்டதாரிகளாக இருப்பவர்கள் மேல் படிப்புக்கு வெளிநாடு செல்வதைக்கூடத் தடுத்து நிறுத்த முற்பட்டு இங்கேயே அவர்கள் உயர் கல்வி பெறவேண்டும் என்று வற்புறுத்தியது. அந்தவிதமான சூழ்நிலையில் இந்த உயர் கல்விக்கு ஒதுக்கப்பட்ட பணம் குறைக்கப்படுவதை நாங்கள் அனுமதிக்க முடியாது. ஏனைய துறைகளிலே குறைக்கப்பட்டிருந்தாலும், உயர் கல்விக்கு ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட பணம், உயர் கல்வி கற்கின்ற பல்கலைக் கழக மாணவர்களுக்கு அளிக்கப்படுகின்ற வசதிகள் போதாமல் இருப்பதனால், அது குறைக்கப்படுவதை நாம் அனுமதிக்க முடியாது. இதன் காரணமாகத்தான் பல்கலைக் கழக மாணவர்கள் மத்தியிலே விரக்தியும் அதிருப்தியும் வளர்ச்சி அடைந்து, மாணவர்கள் மத்தியில் பல்வேறு சிக்கல்கள், பிரச்சினைகள் உண்ணா விரதங்கள் போன்றவைகூடத் தோன்றுவதற்குக் காரணமாக இருக்கின்றன. அந்தவிதமான தேவைகளை நிறைவேற்றுவதற்காக ஒதுக்கப்பட்டபணத்தை வெட்டிக் குறைப்பதைக் கைவிடுமாறு நான் அரசாங்கத்தைக் கேட்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

**பல்கலைக் கழகம் - ஒரு பழைய கட்டடம் !**

உதாரணமாக, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு அத்தியாவசியமாகத் தேவையான சில கட்டடங்களுக்கு 1980ம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்திலிருந்தும் பணம் ஒதுக்கப்பட்டது, பாவம், பிரதி உயர்கல்வி அமைச்சர் திரும்பிப் பார்க்கின்றார். தம் சகாக்கள் யாரும் இல்லையே என்று. பிரதி அமைச்சரைத் தவிர அவர்கள் யாருக்குமே உயர்கல்வியைப் பற்றிய அக்கறை இல்லைப்போல் தெரிகிறது. அப்படியான பரிதாபகரமான நிலையில் உயர்கல்வியானது இந்தப் பாராளுமன்றத்திலே விடப்பட்டிருப்பதை நாங்கள் கவனிக்காமல் இருக்க முடியாது. அவ்வளவு அக்கறையின்மை ஆளும் கட்சி வரிசையிலே உயர்கல்விக்கு இருப்பது மிகவும்வேதனையைத் தருகிறது. ஒரு நாட்டுக்கு அதி முக்கியமானதாக விளங்கும் உயர் கல்வியிலே, அமைச்சர்கள்,, பிரதி அமைச்சர்கள்,மாவட்ட அமைச்சர்கள், ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் யாருமே அக்கறை இல்லாதிருப்பது - ஆளும் கட்சியினர் இரண்டுபேரைத்தான் நான் இச்சபையில் காண்கிறேன். ஒருவர் கல்வித் துறையிலே மிகவும் ஈடுபாடு கொண்ட காலித்தொகுதிப் பிரதிநிதி (கலாநிதி டபிள்யூ, தஹநாயக்க) அவர்கள், மற்றவர் கொழும்பு மத்திய தொகுதி இரண்டாவது பிரதிநிதி (ஜனுப் ஜாபீர்.ஏ.காதர்) அவர்கள் எமக்கு வேதனையைத் தான் தருகிறது. இவர்களைத் தவிர வேறு யாருமே இங்கில்லாமலிருப்பது உண்மையில் வேதனையைத்தான் தருகிறது,

கௌரவ தலைவரவர்களே, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களால் நிறுவப்பட்ட ஒரு பழைய கல்லூரியைப் பொறுப்பெடுத்து அங்கே அமைக்கப்பட்டது என்பது உங்களுக்குத் தெரியும். அங்கேயுள்ள பிரதான கட்டடங்கள் அத்தனையும் 60 70 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டன. சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் இறந்தே ஐம்பது ஆண்டுகள் முடிந்துவிட்டன. அவர் இறப்பதற்கு இருபது ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டடங்கள் தாம் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கட்டடங்களாக இருக்கின்றன. அதனால் அங்கே கட்டடங்கள் கட்டப்படவேண்டுமென அதற்காக நிதி ஒதுக்கப்பட்டது 1980ஆம் ஆண்டு செய்யப்பட்ட வேலைகளுக்காக ஒரு உபமானியமாக இரண்டு கோடி ரூபாவை Supplementary Estimate for 20 million for 1980 - மந்திரி சபை அங்கீகரித்திருந்தது. ஆனால் அரசாங்கம் உபமானியங்கள் இல்லையென்று முடிவெடுத்ததன் பயனாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு 1980ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட அந்த உபமானியமான இரண்டுகோடி ரூபாவும் வழங்கப்படவில்லை என்று நான் அறிகிறேன். அங்கேயுள்ள இடநெருக்கடியை, மாணவர்களின் வசதிக் குறைவை போக்குவதற்கு என்ன வழியை அரசாங்கம் கைக்கொள்ளப் போகிறது என்று தெரியவில்லை, இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட பணத்திலும் பல்வேறு பல்கலைக் கழகங்களின் வெவ்வேறு தேவைகளுக்காக ஒதுக்கப்பட்ட மானியங்கள் கௌரவ நிதி அமைச்சர் அவர்களால் குறைக்கப்பட்டிருக்கிறது.

**தூரக் கல்வி மாணவரின் துன்பம்**

நான் இந்தச் சந்தர்ப்பத்திலே பத்து ரூபா வெட்டுப் பிரேரணையைக் கொண்டு வந்தாலும் இந்த உயர் கல்விக்கு ஒதுக்கப்பட்ட மானியத்தில் நீங்கள் வெட்டியதைத் திருப்பிக் கொடுத்து எங்கள் வருங்காலச் சந்ததியாகிய மாணவர் சமுதாயத்தை ஏற்ற சூழ்நிலையில் சிறப்பாக கல்வி பயில வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுங்கள் என்று தான் உண்மையில் அரசாங்கத்தைக் கேட்க விரும்புகிறேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மாத்திர மல்ல, பல்கலைக்கழங்கள் எதிலும் இடம்பெற முடியாத மாணவர்கள் முந்திய அரசாங்கத்தால் நிறுவப்பட ''Institute of Distance Education'' அதாவது தூரக்கல்வி நிறுவனம் என்ற ஒரு நிறுவனத்திலே கல்வி கற்று வந்தார்கள் அதன் மூலம் அவர்கள் வெளிவாரி மாணவர்களாகப் பட்டப் படிப்பைத் தொடர்ந்து பட்டதாரிகளாக வருவதற்கு வாய்ப்புப் பெற்றிருந்தார்கள். அதில் வெளிவாரி மாணவர்களாகப் படித்து வந்த தமிழ் மொழி மூலம் பயின்ற மாணவர்கள் தமது விரிவுரைக் குறிப்புக்களை நேரத்துக்குப் பெற முடியாதுபட்ட துன்பத்தை நான் முன்பு ஒரு தடவை இந்தச் சபையிலே எடுத்துக் காட்டியிருக்கிறேன். ஆனால் இந்த ஆண்டு நிதி ஒதுக்கீட்டைப் பார்த்தால் தூரக் கல்விக்கு Distance Education ஒதுக்கப்பட்ட பணம் மிகமிகக் குறைக்கப்பட்டிருக்கிறது. 4,10,470 ரூபா மாத்திரம் இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருப்பதை நாம் காணக் கூடியதாக இருக்கிறது. சென்ற ஆண்டு 27,71,000 ரூபா ஒதுக்கப்படிருந்தது. சென்ற ஆண்டிலேயே அந்த தூரக் கல்வி நிறுவனத்தால் சரியான சேவைபுரிய முடியவில்லை. இப்பொழுது 4,10 470 ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதால் அதனால் என்ன செய்ய முடியுமோ நான் அறியேன்!

ஒருவேளை திறந்தவெளிப் பல்கலைக்கழக - Open University— முறையை அரசாங்கம் கொண்டுவர இருப்பது அந்த இடத்தை எடுப்பதற்குத்தான் என்று உயர் கல்வி அமைச்சு கருதுகின்றதோ தெரியாது. அது எப்பொழுது செயற்படுமோ, எப்பொழுது பூரணமா இயங்குமோ தெரியாது. அதுவரைக்கும் வெளிவாரிப் பட்டப் படிப்பு மாணவர்களின் வசதிகள் குறைக்கப்படாது, அவர்கள் கல்வி கற்க ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும் என இங்கு வற்புறுத்த விரும்புகின்றேன்.

**பணம் ஒதுக்கப்படாத பல்கலைக் கழகக் கல்லூரி**

பல்கலைக் கழக மானியத்தைப்பற்றிக் குறிப்பிடும் பொழுது, ஒன்றைக் கூற வேண்டும். மட்டக்களப்பில் ஒரு பல்கலைக்கழகக் கல்லூரி சென்றஆண்டு அமைக்கப்படும் என்று கூறினார்கள். 1980ம் ஆண்டிலே வேலை ஆரம்பிக்கப் படும் என்று கூறினார்கள். சில மாதங்களுக்கு முன் அந்தப் பல்கலைக்கழகக் கல்லூரிக்காக 43 இலட்சம் ரூபாவுக்கு ஓர் உபமானியப் பிரேரணை கூட இந்தச் சபையிலே சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப் பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெளிவாக எடுத்துக் கூறினேன், ஒரு பல்கலைக்

(தொடர் 7-ஆம் பக்கம்)

# மலையகமே!

# உன் நிலை மாறுதா?

இலங்கை சுதந்திரமடைந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தலும் நடைபெற்று அரசாங்கங்களும் மாறிக்கொண்டே வருகின்றன. ஆனால் மலையகம் மலையகமாகவே காட்சியளிக்கிறது. தோட்டத் தொழிலாளி தொழிலாளியாகவே இருந்து வருகின்றான். உலகத்தில் எத்தனையோ மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஏன் இந்தியாவே சந்திர மண்டலத்துக்கு ''ராக்கட்டை'' அனுப்பும் அளவுக்கு முன்னேறியுள்ளது.

இலங்கையிலும் என்னென்னவோ மாற்றங்களும் நடைபெற்று வருகின்றன. பொதுவாக வட-கிழக்கு தமிழர்களை எடுத்துக்கொள்வோம். அவர்கள் கேட்பது தனிநாடு. சிங்களவர்களை எடுத்துக்கொண்டால் அவர்கள் சொல்வது ''அப்பே கம'' என்று. ஒரு மலைநாட்டுத் தமிழனை எடுத்துக்கொண்டால் அவன் சொல்வது, இந்தியா தான் என் தாய்நாடு என்று. பிறந்து, வளர்ந்து, திருமணம் செய்து, குழந்தைகளைப் பெற்றதெல்லாம் இலங்கையில்! சாகப் போவது கூட இலங்கையில்! ஆனால் அவன் சொல்வது இந்தியா தான் என் நாடு என்று.

இதற்குக் காரணம், தனக்கு என்று ஒரு கையளவு தானும் நிலம் அவனிடம் இல்லையே! இது என்னுடைய சொந்த நிலம் என்று சொல்ல மனத் தைரியம் இல்லையே! இது அவன் செய்த பிழையா? அல்லது அவனின் பெற்றோர்கள் செய்த பிழையா? இந் நிலை மாறுதா? இது ஒவ்வொரு தோட்டத் தொழிலாளியின் உள்ளத்திலே எழும் ஒரு கேள்வியாகும், இந்நிலையை மாற்றலாம். மாற்றுவதாயிருந்தால் இளம் சமுதாயத்தினரால் மட்டும் தான் மாற்ற முடியும். அதற்குப் பல வழிகளும் இருக்கின்றன:

—சாதி, மத, பேதங்களை மாற்றியமைத்தல்.

—போட்டி, பொறாமைகளை விட்டு எல்லோரும் தமிழினம் என்ற அடிப்படைக்குக் கொண்டு வருதல்.

—கல்வியறிவு அற்றவர்களுக்கு கல்வியின் நாட்டம் கொள்ளச் செய்து எல்லோருக்கும் கல்வியறிவை புகட்டுதல்.

—தொழிற் சங்கங்களையே நம்பி இராமல், சமுதாய மேன்பாட்டுக்காக வேறு பல நல்ல வழிகளில் உழைத்தல்.

இதை ஒவ்வொருவரும் மனதில் கொண்டு செயல் படுவோமேயானால் வெற்றி நிச்சயம் எம் பக்கம் உண்டு. மலையகத்தின் நிலையை மாற்ற அரசாங்கத்தினால் முடியுமானால் அரசாங்கம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை செயல்படுத்த வேண்டும்.

—இலங்கையில் பிறந்த ஒவ்வொரு தொழிலாளிக்கும் எவ்வித நிபந்தனையுமின்றி பிரஜாவுரிமை என்ற 'லைசன்ஸ்' வழங்கப்பட வேண்டும்.

—ஏனைய சமுதாயத்தவருக்கு, நிலங்கள், வீடுகள் கொடுத்திருப்பது போல் தோட்டத் தொழிலாளிக்கும் கொடுக்கப்பட வேண்டும்.

—படித்த, இளைஞர், யுவதிகளுக்கு அதே தோட்டங்களில் வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுத்தல் அல்லது, விவசாயத்தில் ஈடுபட, பண்ணைகள் அமைக்க உதவி செய்து கொடுத்தல்.

—தொழிலாளியின் பேரில் பிடித்துவைத்திருக்கும் E.P.F. (சேமலாப நிதி) பணத்தை உரிய காலங்களில் கொடுத்தால், அவன் விரும்பிய இடத்தில் குடியேற வசதியாக இருக்கும்.

தொழிலாளி வசிக்கும் வீட்டை, தோட்டக் காணிகளை அவனுக்கே சொந்தமாக்குதல்.

இவைகளை அரசாங்கம் செவிமடுத்து செய்யுமேயானால் மலையகம் நிச்சயம் ஒரு நல்ல நிலையை வந்தடையும். பொதுவாக தோட்டங்கள் கிராமங்களாக மாறவேண்டும்,

**தோட்ட உத்தியோகத்தர்கள்:**

இங்கு வேலை செய்யும் உத்தியோகத்தர்கள் தான் தொழிலாளிகளை குழி தோண்டிப் புதைக்க வழி செய்கிறார்கள். ஏதோ ஒரு வேலையைச் செய்து கொடுக்கவேண்டுமானால் அதற்கு ''பீஸ்'' சம்திங் கொடுக்க வேண்டும். அவர்களுக்குப் பயந்து அவர்களின் வீடுகளில் தோட்டங்களில் வேலைசெய்து கொடுக்கவேண்டும். எமது தொழிலாளிகளும் பயந்தவர்கள் தானே? எதிர்த்துப் பேச தைரியம் எங்கே இருக்கிறது? தொழிலாளிக்காகத் தான் தோட்ட உத்தியோகத்தர்கள் இருக்கிறார்கள் என்பதைத் தொழிலாளியும் மறந்துவிடுகிறான். 'Staffs' ம் மறந்துவிடுகிறார்கள். தொழிலாளியின் பிள்ளை படித்து முன்னுக்குவந்திடுவான், அதைக் கெடுத்து தன் சொற்படியே அவனையும் தனக்குத் தலைசொறிய வைக்க வேண்டும் என்று இன்னும் எண்ணும் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள்.

**மு. காத்தான்**

**நுவரெலியா**

> இன்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனாவின் தலைமையின் கீழ் இலங்கையில் ஆட்சி நடக்கின்றது ஜனாதிபதி ஆட்சியின் அரசியலமைப்பு சட்டத்துக்கான நெறிகளை அமைத்த குழுவில் நானும் இடம் பெற்றேன். இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினரின் நலனுக்கென பல புதிய நெறிகளை நான் ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தேன். இதன்படி இன்று இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினர் வாழ்வில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. பதிவுப் பிரசை, வம்சாவளிப் பிரசை என்ற பாகுபாடில்லை. வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழர்களைப் போலவே, ஏனைய பகுதி யாழ் பதிவுப் பிரசைகளும் சகல உரிமைகளையும் பெற்றுள்ளனர்.
>
> (பி. டி. ஐ. செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் அமைச்சர் தொண்டமான்)

**பிரஜாவுரிமை:-**

1964-ம் ஆண்டு சிறிமா, சாஸ்திரி ஒப்பந்தத்தின் படி பிறந்த மண்ணை விட்டு, சொந்த பந்தங்களைப் பிரிந்து புனர்வாழ்வு என்ற அடிப்படையில் அகதிகளாக தாயகம் சென்று, கொண்டுசென்ற பணம், நகைகளை விற்றுத் தின்று, இன்று ஓட்டாண்டியாக பிச்சை எடுத்தும் பெண்களை விபச்சாரங்களில் ஈடுபடுத்தவும் வகை செய்துள்ளது இந்த ஒப்பந்தம்.

மேட்டைப் பள்ளமாக்கி பள்ளத்தை களனிகளாக்கி காட்டை அழித்து அரும்பாடு பட்டு உழைத்து, நெற்றி வியர்வை நிலத்தில் பட கஷ்டப்பட்டு மாடாய் உழைத்து அந்நியச் செலவாணியைத் தேடிக் கொடுக்கும் தோட்டத் தொழிலாளிக்குப் பெயர் அகதிகள் இவன் செல்லும் இ த்துக்குப் பெயர் 'புனர் வாழ்வு'' இப்படியான ஒரு ஒப்பந்தம் தேவை தானா? மனிதாபிமானத்துடன் செயல்படுபவர்கள் யாரும் இல்லையா? இந்த ஒப்பந்தம் யாரைக் கேட்டு அமுலாக்கப்பட்டது. இரு அரசாங்கங்களுமே இதை நினைத்துப்பார்க்கவில்லை தோட்டத் தொழிலாளர்களை இவர்கள் 'பகடைக்காய்'களாக வைத்து ஆடிவிட்டார்கள். இரு மருங்கிலும் அடிபடுவதும் உதைபடுவதும் தொழிலாளியேதான். ஆகவே இப்பொழுது அமுலாக்கப் படப் போகும் ஒப்பந்தமாவது நல்ல முறையில் நல்ல தீர்ப்பை நல்கி மனிதாபிமானத்துடன் செயல்படுவார்கள் என நினைக்கிறேன்.

**படித்த இளைஞர்கள்**

இவர்களுக்கு படித்தும் தொழில் இல்லை. விவசாயம் செய்ய வேண்டுமென்றாலும் காணியில்லை தனக்கென்று இருக்க வீடு இல்லை; ஏதோ பெற்றோர்களுடன் ஒதுங்கி வாழ்ந்து வருகின்றனர். பெற்றோர்கள் இறக்கும் சமயத்தில் இவர்களின் நிலை என்ன? இவர்கள் யாரை நம்பி எங்கு செல்கிறார்கள்? இப்போதே ஒரு சிலர் திருமணம் முடித்து மனைவியுடனும் குழந்தை குட்டிகளுடனும், தனக்கு இருக்கும் சிறு காணியின் (தோட்டக் காணியில்) விவசாயம் செய்து வருகின்றனர். இவர்கள் தோட்டங்களில் வேலை இல்லாததால் இவர்களுக்கு தோட்டங்களில் எந்த விதமான உணவுப் பொருட்களும் கொடுக்கப்பட மாட்டாது. (வங்கிகளில்) கிழங்கு பயிரிட கடன் வாங்க அத்தாட்சிப் பத்திரம் தோட்டத் துரையிடம் இருந்து கொண்டு சென்றால் தான் கடன் வாங்க முடியும். ஆனால் தோடத்துரையோ தோட்டத்தில் வேலை இல்லை. அதனால் உனக்கு கடிதம் தர முடியாது என்று மிருகத்தனமாக சொல்லி விடுவார். அப்போது அவர்களின் நிலை என்ன? சிறிது சிந்தித்துப் பாருங்கள். ஏதோ கடனை வாங்கி கிழங்கு பயிரிட நேர்ந்தால் அறுவடையின் போது லாபம் கிடைத்தால் அவன் அதிஷ்டம். இல்லாவிட்டால் 'கோவிந்தா' போட வேண்டியது தான். கடனைக் கட்டுவதா? பெண்டாட்டி பிள்ளைகளைப் பார்ப்பதா? இதையிட்டு மனிதாபிமானம் ள்ள மனிதர்களால் தான் சிந்தித்துப் பார்க்க முடியுமே தவிர மற்றவர்களால் அல்ல

ஆகவேதான் எம் போன்ற இளைஞர்கள் கேட்கிறோம்! மலையகமே! உன் தலைவிதி இதுதானா? உன் நிலைமை மாறுதா? அல்லது மாறக் கூடாதா? முயற்சிப்போம்; விடா முயற்சி வீண்போகாது. மலையகமே நீ எங்களை ஏமாற்ற இனி முடியாது.

மாற்றுவோம்

மாற்றிக் காட்டுவோம்

## பட்டிருப்புத் தொகுதிக் கிளைக் கூட்டம்

மேற்படி கிளைக் கூட்டம் 25-10-80ல் பட்டிருப்பு பாராளுமன்ற உறுப்பினர் திரு. பூ. கணேசலிங்கம் அவர்கள் தலைமையில் பெரிய கல்லாற்றில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மூலக் கிளை உறுப்பினர்கள் 37 பேர் பிரசன்னமாயிருந்தனர்.

இக் கூட்டத்தில் அமரர் சி. மு. இராசமாணிக்கம் அவர்களின் சிலை அமைப்புக்கான நிதி சேகரிப்பு, உதய சூரியன் பத்திரிகை விற்பனை போன்ற விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டன.

இறுதியில் பெரிய கல்லாறு தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளையின் சார்பில் கூட்டத்திற்குச் சமூகமளித்திருந்த எல்லோர்க்கும் தேநீர் விருந் தளித்து உபசரிக்கப் பட்டது.

# ஊர்வலம்

## தமிழ் படும் பாடு

தமிழில் முகவரி எழுதப்பட்ட கடிதங்கள் ஒழுங்காக விநியோகிக்கப் படுவதில்லை—உரியவர்களிடம்சேருவதில்லை. அஞ்சலகத்தில் கடிதங்களைத் தரம் பிரிக்கும் பிரிவில் தமிழ் தெரியாதவர்கள் இருப்பதினுல்தான் இந்நிலை ஏற்பட்டுள்ளதென சாவகச்சேரி பா.உ நாடாளுமன்றத்தில் எடுத்துச் சொல்லியுள்ளார்.

## வாய் திறந்தால் வரும் ஆபத்து!

அண்மையில் நாடாளுமன்றத்தில் ஐ.தே.கட்சி உறுப்பினர் திரு.எம்.டி.எச்.ஜயவர்த்தன பேசும்போது குறைநிரப்புப் பிரேரணைக் கெதிராக நாம் இங்கே வாய் திறந்தால் உடனே வெளியேற்றப் படுவோம் என்று வேதனையோடு தெரிவித்திருக்கிருர்.

## தேவநாயகம்—தயாரத்ன லடாய்!

பொத்துவில் தொகுதியின் இரண்டாவது பா.உ.வாக திருமதி ரங்கநாயகி பத்மநாதனை ஐ.தே.கட்சி மேலிடம் நியமித்ததும்—அமைச்சர்தேவநாயகத்திற்கும் அம்பாறை மாவட்ட அமைச்சர் திரு.பி தயாரத்னவுக்குமிடையே ஒரு பெரும் போட்டியே ஆரம்பமாகி விட்டது.

எனது சிபார்சின் பேரில்தான் திருமதி ரங்கநாயகியை ஜனதிபதி எம் பி யாக நியமனம் செய்தார்.இதைப் பற்றிக் கேட்க அம்பாறை மாவட்ட அமைச்சருக்கோ அல்லதுவேறு யாருக்குமோ உரிமையில்லை என்ற அமைச்சர் தேவநாயகத்தின் பேச்சே அவர்கள் இருவர்க்குமிடையேயுள்ள லடாயைக் காட்டிக் கொடுத்து விட்டது.

## கற்குடாத் தொகுதியில் குடும்ப ஆட்சி

கற்குடாத் தொகுதியில் உள்ள ஏருவூர் வடமேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு ஜனநாயகத்திற்கு விரோதமான முறையில் எட்டுப்பேர் இயக்குநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் தலைவராக நியமிக்கப்பட்டவர் உள்நாட்டு அமைச்சர் தேவநாயகம் அவர்களின் சகோதரர் திரு. தியாகராசா ஆவார்.

குடும்ப ஆட்சியை ஒழித்து விட்டோம் என்று கூறும் யு. என். பி. ஆட்சியில் கற்குடாத் தொகுதியில் இப்படியொரு குட்டி குடும்ப ஆட்சி முளைத் திருப்பது கவனிக்கத் தக்கது.

## மூடு விழா முயற்சிகள்

சிலாபத்தில் உள்ள தமிழ் மகா வித்தியாலயத்தை படிப்படியாக மூடிவிடுவதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப் படுகின்றனவாம்.

வித்தியாலயத்துக்குச் சொந்தமான காணி, அருகில் உள்ள ஆரம்ப பாடசாலைக்கு கையளிக்கப்பட விருப்பதே மூடு விழாவின் ஆரம்பம் என்று நம்பப்படுகின்றது.

கொழும்பு பல்கலைக் கழகத்தில் உள்ள சகல தமிழ்த்துறைப் பீடங்களையும் மூடி விடுவதற்கான முயற்சியில் பல்கலைக் கழகமானிய ஆணைக்குழு இறங்கியிருக்கின்றது.

இது ஒரு இன விரோத நடவடிக்கையென நாடாளுமன்றத்தில் கண்டித்துப் பேசிய எதிர்க் கட்சி முதல்வர் இதனுல் எங்களைத் தனியாக விட்டு விடுங்கள் என்று கேட்பதில் என்ன தவறிருக்க முடியும் என வினவியிருக்கின்ருர்.

## தொழிற் சங்கத் தலைவரை இழந்து விட்டோம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கச்சேரியில் பணியாற்றிய வரும் அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் வட பிராந்தியக் கிளைத் தலைவருமான திரு. க. செல்வத்துரையின் திடீர் மரணம் என்னை ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தி விட்டது.

பொருளாதாரப் பிரச்சனையை முன் வைத்து அண்மையில் நடாத்தப்பட்ட வேலை நிறுத்தத்தில் சாதாரண மக்களின் தலைவனுக முன்னின்று உழைத்த தலைவர் செல்வத்துரையின் ஆத்மா சாந்தி அடையப் பிராத்திக்கின்றேன்.

இவ்வாறு அன்னுரின் மறைவை யொட்டி அரசாங்க எழுது வினைஞர் சங்கத் தலைவர் த, நமசிவாயம் விடுத்த அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்

## அம்பாறையில் தமிழர் அனுதையா?

அம்பாறை மாவட்டத்தை அரசாங்கம் இப்போது தனிச் சிங்கள மாவட்டமாகவே கணித்து கருமங்களை மேற்கொண்டு வருகின்றது. இப்படி—அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் தினகரன் ஏடே செய்தி வெளியிட்டுள்ளது.இது உண்மை யென்பதை பொத்துவில் தொகுதி 1 வது எம்.பி. டாக்டர் ஜலாதீனின் நாடாளுமன்றப் பேச்சும் உறுதிப்படுத்துகின்றது.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

# பல்கலைக் கழக...

கழகத்தை அமைப்பதற்கு அத்திவாரம் இடுவதற்குக்கூட இந்த 43 இலட்சம் ரூபா போதாதென்று. எத்தனையோ ஆடம்பரச் செலவுகளுக்கெல்லாம் கோடி கோடியாகக் கொட்டிச் செலவழிக்கின்ற அரசாங்கம், கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்களின் கல்வி வசதிக்கென ஒரு பல்கலைக் கழகம் அமைக்க 43 இலட்சம் ரூபாவை மாத்திரம் ஒதுக்குவது வெறும் கேலிக்கூத்தான செயலாகும்'

ஆனுல் இந்த ஆண்டு நிதி ஒதுக்கீட்டிலே மட்டக்களப்பு பல்கலைக் கழகக் கல்லூரிக்கு ஒதுக்கப்பட்ட பணத்தைப் பற்றி எதையும் தெளிவாகக் காணமுடியாத நிலை இருக்கிறது. அதற்கு எங்கேயாவது ஒரு மூலையில் பணம் ஒதுக்கப் பட்டிருக்கிறதோ என்னவோ தெரியாது ஆனுல், நிச்சயமாக அந்தப் பல்கலைக் கழகக் கல்லூரி மிகவும் புறக்கணிக்கப்பட்ட ஒரு நிலையில் தான் இருக்கின்றது என்பதை பிறப்பதற்கு முன்பே புறக்கணிக்கப் பட்ட ஒரு குழந்தையாக மாற்றப்பட்டு விட்டது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இந்தவிதமாக உயர் கல்வி நிலையங்களின் தேவைகள்புறக்கணிக்கப்படுவதானுல் இந்நாட்டில் மாணவர் சமுதாயம் ஒரு குழப்பத்துக்கு ஆளாகி, வேறு சில நாடுகளில் நடப்பதுபோல் அரசாங்கத்துக்கு விரோதமான சக்திகளாக மாறும் நிலைதான் ஏற்படும் என நான் அரசாங்கத்தை எச்சரிக்கக் கடமைப் பட்டவனுக இருக்கிறேன்.

(அடுத்த இதழில் முடியும்)

# தேவநாயகம் ஜனநாயகம்

கறுவாக்கேணி முத்து மாதவன்

முன்னைய நீதி அமைச்சரும்,இப்போதைய உள்துறை அமைச்சருமான தேவநாயகத்தாரின் தொகுதியில்,நடைபெற்றுள்ள மற்ருெரு பழிவாங்கல்:-

கடந்த வருடத்தில் நடந்த தேசிய கடதாசி ஆலை (வாழைச்சேனை) ஊழியர் பேரவை தேர்தலில் (ஜனநாயக முறைப்படி) 12 கூட்டணி ஆதரவாளர்கள் அமோக வெற்றியீட்டினர். 6 பேர் ஏனைய கட்சிகளில் தெரிவாகினர். ந.குகதாசன் (கூட்டணி) தலைவராகவும், ஏ. எம். அபு சாலி, (சு.க.) தலைவராகவும் வாக்கெடுப்பு மூலம் பதவி ஏற்றனர்.

இது,பச்சை இனவாதிகளின் பாகற்காய் நெஞ்சிலே—படுகசப்பை சேர்க்க—ஆலவட்டம் பிடிக்கும் அதிகார வெறியர்களுக்கு அவமானத்தை கொடுக்க பசியோடு பார்த்திருக்கும் பயங்கர மிருகங்களைப்போல...பழிவாங்கும் பாதக உணர்ச்சி மேலோங்க!!... தலைவர்களை தட்டிவிட தருணம் பார்த்தனர்... சில தம்மிஷ்ட வாதிகள்!!

வழமைபோல,வருடா வருடம் நடக்கும் விளையாட்டுப் போட்டியும் வந்தது.ஊழியர் பேரவையின் நிர்வாகிகள் கூடினர்!!பிரதம அதிதியாக சிறீலங்காவின் எதிர்க் கட்சி தலைவரும்,தமிழர் விடுதலை கூட்டணி செயலாளர் நாயகமுமான அண்ணன் அமிர்தலிங்கத்தை அழைக்க வாக்கெடுப்பின் மூலம் முடிவாகிற்று.

அந்தோ!...பரிதாபம்!!ஆள் விழுங்கி கழுகுகள் ஆந்தைக் கண்களை அகலத்திறந்தன...!! மின்னல் வேகத்தில் காரியங்கள் நடந்தன... மேலிடத்துக்கு செய்திகள் மிக அவசரமாகப் பறந்தன!!... விளைவு!! அண்ணன் "அமிரை" அழைக்க தீர்மானித்த ஊழியர் பேரவை தலைவர்கட்கு உடனடி மாற்றல்,சிங்கள நாட்டிலே உள்ள எம்பிலிபிட்டியாவுக்கு!! இது தான் நமது அரசாங்கம் என்றும், தார்மீக ஆட்சியென்றும்,ஜனநாயகரீதி என்றும்,தர்மிஷ்ட நீதியென்றும் ஒப்பாரி வைக்கின்ற—மேடைக்கு மேடை குடல் கிழிய கத்துகின்ற சிறீலங்கா ஆட்சியாளரின் தம்மிஷ்டப் போக்கா?பழிவாங்கப்பட்டுள்ள ந.குகதாசன்... திடீரென எம்பிலிபிட்டியாவுக்கு மாற்றப் பட்டுள்ளாரே! ஏன்? அவர் கடமையிலேதவறவில்லை,ஊழியர்களின் ஒழுங்கு விதிகளிலே தவறவில்லை.

அவர் எதிலுமே எந்தச் சந்தர்ப்பத்திலும் முகாமைக்கு மாருக நடக்கவில்லை!!ஊழியர் பேரவையின் பெரும்பான்மை பலத்துடன் தலைவரானவர்! ஜனநாயக ரீதிப்படி — வாக்கெடுப்பின்படி தீர்மானித்தவர். அவருக்கு தீர்மானத்தை சகல நிருவாகிகளுடனும், நிறைவேற்ற பூரண சுதந்திரம், உரிமை இருக்கிறது ......... ஆனுல்!! அநீதியான, அநாகரிகமான, செயலைச் செ[illegible] திருக்கிறது மேலிடம்.

இவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்கள் என்பதால், திட்டமிட்டு பழிவாங்கியிருப்பது சிறீலங்காவிலே தமிழர்கள் எப்படியும் வாழக்கூடாது என்ற விஷ நெஞ்சங்களை தெரியவைக்கிறது!!

பிரதான அரசியல் கட்சி ஒன்றின் செயலாளர்! தமிழர்களின் மிகப்பெரிய தளபதிக்கு, தமிழர் பூமியாம் கல்குடாவிலே கூட்டணி நிருவாகிகள் அதிக பெரும்பான்மை பெற்றுள்ள காகித ஆலையிலே அதுவும் ஒரு விளையாட்டுப் போட்டிக்கு பிரதம அதிதியாக சமுகம் தர மறுப்பு எழுவது என்ருல், தீர்மானம் செய்தவர்களையே வேறிடத்துக்கு தூக்கி எறிவது என்ருல்... தமிழர்களின் அந்தஸ்து... சுதந்திரம்... உரிமை எந்த அளவுக்கு மண்ணுக்குள்ளே புதைக்கப்படுகிறது என்பதை... தமிழினமே! சிந்தித்துப்பார்!!

ந. குகதாசனையும், ஏ. எம். அபுசாலியையும் போல... எத்தனையோ தமிழ் ஊழியர்களை ஏழைத் தொழிலாளிகளை, பேச்சுரிமை, எழுத்துரிமை, அற்றவர்களாக்கி நடுவீதி

(8ம் பக்கம் பார்க்க)




றொமின், ஹறிலிஸ்ற் நீர் இறைக்கும்
இயந்திரங்கள், உதிரிப் பாகங்களின்
ஏகவிற்பனையாளர்கள்

துர்க்கா ஓட்டோ காட்வெயர்ஸ்

11, ஸ்ரான்லிறேட்
யாழ்ப்பாணம்.

சாந்தி (யாழ்ப்பாணம்) 2-வது வாரம்
10-30, 2-30, 4-45, 7-00, 9-45.

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

THE WIL BY
CONSPIRACY
(Colour) (ஆங்கிலம்)

விரைவில் எதிர்பாருங்கள்!

எஸ். பி. வீரப்பா அளிக்கும்

திசை மாறிய பறவைகள்!

(வண்ணச் சித்திரம்)

ராஜா (யாழ்ப்பாணம்)
10-30, 2-30, மாலை 6-00 9-15
இப்பொழுது நடைபெறுகிறது!
என். எம். நம்பியார் — கே. ஆர். விஜயா,
மேஜர் சுந்தரராஜன். லதா, ஜெய்கணேஷ்,
★ மற்றும் பலர் நடித்த ★

★ சுப்ரபாதம் ★

(பக்திப் பரவசம் நிறைந்த சித்திரம்)
(ஈஸ்ட்மன் கலர்)

# சிறிலங்காவில் மனித உரிமை மீறப்படுகின்றது!

## யாழ் முதல்வர் கண்டனம்

1948ம் ஆண்டில் ஐ.நா. சபை அதன் பிரிவாகப் பிரகடனஞ் செய்துள்ள மனித அடிப்படை ஜனநாயக உரிமைகளை அதில் அங்கம் வகிக்கும் நாடுகள் யாவும் ஏற்றுக்கொண்டு அங்கிகாித்திருப்பதாகப் பெருமை பேசிவருகின்ற பொழுதிலும், அவற்றை அமுல்நடத்துவதில் "எந்தவொரு நாடும் மனித உரிமைகளைப் பொறுத்த மட்டில் குறைபாடு இல்லாத நிறைவு பெற்ற நாடாக இல்லை என்பதே உண்மை.



இவ்வாறு — 'மனி உரிமைகள்' தினத்தையிட்டு யாழ்ப்பாணம் பொதுசன நூல் நிலையத்தில் உள்ள சாம்சபாபதி மண்டபத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் யாழ் மேயர் திரு. இராசா விசுவநாதன் பேசுகையில் கூறினர். அவர் மேலும் சொன்னதாவது-

ஸ்ரீலங்காவை எடுத்துக் கொள்ளும்போது தமிழ் ஈழ மக்களுக்குள்ள சுய நிர்ணய உரிமை மறுக்கப்படுவது ஒன்றே போதும் மனிதஉரிமை மீறுதலை நிலைநாட்ட, தமிழ்ப் பேசும் தமிழ் ஈழ நாட்டு மக்கள் கடந்த ஜூலை 1978 பொதுத் தேர்தலைத்தானே ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகச் சந்தித்து தமது ஜீவாதார மனித உரிமையான சுயநிர்ணய உரிமையை ஏற்கனவே பிரயோகித்து விட்டார்கள். ஒரு நாகரீக அரசாக இருந்தால் அந்தமுடிவை அங்கீகரித்திருக்க வேண்டியதே மரபு. அது பொதுத் தேர்தலான படியால் வேறுபல பிரச்சினைகளும் முன்வைக்கப்பட்டிருக்கலாமெனவும் அதனுல் அதனைச் சர்வஜன வாக்கெடுப்பாகக் கருத முடியாது என்றும் வாதத்துக்குக் கூறலாம். அப்படியாயின் செய்யக் கூடியதும், செய்ய வேண்டுவதும் ஐ. நா. பார்வையாளர் முகதாவில் தனித்து அந்த ஒரு பிரச்சினை மீதே ஒரு சர்வஜன வாக்கெடுப்பைத் தமிழ் ஈழத்தில் நடத்த முன்வந்திருக்க வேண்டும். கனடா அப்படியான வாக்கெடுப்பைக் கியூபெக்கில் நடத்தியுள்ளது. ஸ்ரீலங்கா அரசு தமிழ் ஈழப் பிரச்சினையில் சர்வஜன வாக்கெடுப்பைத் தானே நடாத்தப் பின்வாங்குமானுல், தமிழ் ஈழம் ஏற்கனவே எடுத்த முடிவுக்கு உலக நாடுகளில் அங்கீகாரத்தைக் கோருவதில் என்ன தப்பு. அதனுல்தான் ஐ. நா. பொதுச் சபையும், அதன் உறுப்பு நாடுகளும் தமிழ் ஈழத்தை அங்கீகரிக்க வேண்டும்.

## தேவநாயகம்

[7ம் பக்கத் தொடர்]

யிலே தூக்கி எறியப் படுவதற்கு முன்னுல்,' தொழிலாள சமுதாயமே! ஒரு கணம் சிந்தித்துப்பார்.

ஐயோ!... தர்மிஷ்டமே!... ஜனநாயகமே! இந்த நாட்டிலே உங்களுக்கு 'கல்லறை' (ஞாபக சின்னம்—தர்மிஷ்ட ரீதியில்) வைக்கப்படு முன்பாக, எங்காவது... "நல்ல" நாடுகளை—நல்ல மனிதர்களை தேடுங்கள்!! வீதிக்கு வீதி, உங்களை இழுத்தடித்து... எலும்புந் தோலுமாக ஆக்கி விட்டார்கள்.

# ஊரெல்லாம் நாறும் ஊழல்

வட மாகாணத்திலுள்ள நீர்ப்பாசனப் பகுதி இயந்திரங்களைத் திருத்தும் நீர்ப்பாசன வேலைத் தளம் ஒன்று (Work Shop) மாங்குளத்திலுள்ளது அதில் 25-ம் 26-ம் திகதிகளில் பாரிய புல்டோசர்கள், உழவு இயந்திரங்கள், இயந்திரப் பெட்டிகள், லொறிகள், பாரிய நீரிறைக்கும் இயந்திரங்கள், ஜீப் வண்டிகள், தண்ணீர்கொண்டு செல்லும் பாரிய பௌசர்கள் உட்பட மொத்தம் 120 வாகனங்கள் பகிரங்க ஏலம் நடைபெறுமென அறிவிக்கப்பட்டது.

ஆனுல் பகிரங்க ஏலத் திகதியான 25ம் 26-ம் திகதிகட்கு முன்னர் வவுனியா மாவட்ட அமைச்சர் மகிந்த சோமா- வவுனியா மாவட்ட அமைப்பாளர் புலேந்திரன் ஆகியஇருவராலும் இந்த 120 வாகனங்களுள்ளும் 30 தரமான வாகனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒதுக்கி வைக்கப்பட்டன. இவைகளை விட மற்றய 90 வாகனங்கள் மட்டுமே 25ம் 26-ம் திகதிகளில் ஏலத்தில் விற்கப்பட்டன.

ஆளைக்கட்சி மாவட்ட அமைச்சராலும் – அமைப்பாளராலும் ஒதுக்கப்பட்ட 30 வாகனங்களில் 4 புல்டோசர்கள் 5 ஜீப் வண்டிகள், 5 உழவு இயந்திரப் பெட்டிகள் 4 உழவு இயந்திரங்கள், 4 பாரிய நீரிறைக்கும் இயந்திரங்கள் 4 லொறிகள் என்பனவும் அடங்கும்.

இந்த அநியாயத்தை எந்தத் தர்மிஷ்டரிடம் முறையிடுவது என ஊர் மக்கள் அங்கலாய்க்கிருர்கள்.

மேலும் தற்போது வட மாகாணத்தில் நீர்பாசனப் பகுதியின் இரண்டு இயந்திரங்களைத் திருத்தும் வேலைத் தளங்களே இயங்கி வருகின்றன. ஒன்று புத்தூரிலும் அடுத்தது ஏலவிற்பனை நடைபெற்ற மாங்குளம் வேலைத் தளமுமாகும். இந்த மாங்குளம் வேலைத் தளத்தையும் இரத்மலானைக்கு கொண்டு செல்ல முயற்சிகள் நடைபெறுவதாக இந்த வேலைத் தளத்தில் பணி புரியும் தமிழ் ஊழியர்கள் தெரிவிக்கின்றுர்கள். அப்படி இரத்மலானைக்குக் கொண்டு செல்லப்படின் இங்கு கடமை புரியும் சுமார் 15 ஊழியர்கள் வேலையிழக்க வேண்டி வரும் எனத் தெரிகிறது. இரத்மலானைக்கு அகற்றப்பட்ட பின் நீர்ப்பாசன இலாகாவின் வேலைத்தளம் கடற்படையிருக்கு வழங்கப்பட வுள்ளதாகவும் பேசிக் கொள்ளப்படுகிறது. இது சம்பந்தமாக கிராம மக்களும் கலவரமடைந்துள்ளனர்.

## அகதிகள் . .

[1ம் பக்கத் தொடர்ச்சி]

றப்படுவார்கள் என்று சமீபத்தில் காணி அமைச்சின் முக்கிய பிரமுகர் விடுத்த அறிவிப்பின் எதிரொலியே இந்த வெளியேற்ற நடவடிக்கை யென்று பரிதாபத்துக்குரிய இந்த மக்கள் நம்புகின்றனர்.

உதய சூரியன் வெளியீட்டகத்தால் நல்லூர் சண்முகாபதிப்பகத்தில் 12-12-80 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.